**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG10 – நிலை I – (Grade 1)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Written Examination)
**ஜனவரி–பிப்ரவரி 2021**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
Answer all questions in a word / line. **(10x1 = 10)**

1. சோதியுள் சோதியாக இருப்பவர் யார்?
2. தாள் என்ற சொல்லின் பொருள் என்ன?
3. நல்லவர் நட்பு எதைப் போன்றது?
4. இளவேனில் காலத்தில் வீசும் காற்றின் பெயர் என்ன?
5. கல்லில் சங்கிலிகள் செய்து தொங்கவிடப்பட்ட கோவில் எது?
6. சர் சி.வி. இராமன் கண்டுபிடிப்பின் பெயர் என்ன?
7. வாணிகம் வளர்ந்தால் ஒரு நாடு என்னவாகும்?
8. நாச்சியார் திருமொழியைப் பாடியவர் யார்?
9. மெல்லின எழுத்துகள் எவை?
10. இலை, பழம், காய் முதலியன எவ்வகைப் பெயர்கள்?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
Answer any ten questions in three lines each. **(10x2=20)**

1. குளிர்ந்த பொய்கையில் என்னென்ன இருந்ததாக திருநாவுக்கரசர் கூறுகிறார்.
2. உயிர்மெய் எழுத்துகளை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்? அவை யாவை?
3. காரணப்பெயர் என்பது என்ன? சில எடுத்துக்காட்டுகள் தருக.
4. முத்தொள்ளாயிரம் யாருடைய பெருமையைக் கூறுகிறது?
5. இசுலாம் சமயத்தின் கோட்பாடு யாது?
6. பழமொழிப் பாடலில் தாய்ப் பறவையையும் குஞ்சையும் வைத்துச் சொல்லப்படும் கருத்து என்ன?
7. தமிழ்த்தாய் எந்தத் தொட்டிலில் கிடத்தித் தாலாட்டப் பெறுகிறாள்?
8. கல்வியில் சிறந்தவருடைய நட்பு எதைப் போன்றது என்று நாலடியார் சொல்கிறது?
9. பண்புடையவர் நட்பு எதனைப் போன்றது என்கிறார் திருவள்ளுவர்?

10. முடியரசனார் தமிழை எவ்வாறு மதிக்கிறார்?
11. முப்பெரும்பாடல்கள் யாவை?
12. வாழ்க்கையில் யாருடன் சேரக் கூடாது?
13. வாழைப்பூவின் சிறப்புகள் யாவை?
14. மருத்துவர் வீட்டில் என்னென்ன வடிவங்களில் மருந்துப் பொருட்கள் இருந்தன?
15. விருந்தினரை வரவேற்ற குடும்பத் தலைவியின் முகம் எவ்வாறு இருந்தது?

## பகுதி – இ

**III. எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**

Answer any five questions in six sentences each. **(5x4=20)**

1. பெயர்கள் எப்படியெல்லாம் மாற்றம் பெறுவதாக அப்பா கூறினார்?
2. அபிராமி பற்றி அபிராமி அந்தாதி கூறுவன யாவை?
3. உமறுப்புலவர் – ஆசிரியர் குறிப்பு தருக.
4. அறிவுடையார் – அறிவிலார் நட்பு எப்படிப்பட்டது?
5. வாழைப்பழத்தின் வகைகள் சிலவற்றைக் கூறி, அதன் பயனைப் பற்றி எழுதுக.
6. சார்பெழுத்துகளை எழுதுக.
7. குமரிக் கண்டம் – விளக்குக.
8. மூவிடப்பெயர்களையும் அவற்றில் ஒருமை, பன்மைகளையும் வகைப்படுத்தி எழுதுக.

## பகுதி – ஈ

**IV. ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**

Answer any one of the following questions in fifteen sentences. **(1x10=10)**

1. பதினாறுகால் மண்டபம் பற்றிய செய்திகளை விளக்குக.
2. பெயர்ச்சொற்களின் வகைகளை விளக்கி ஒவ்வொன்றிற்கும் இரண்டு உதாரணம் தருக.
3. வ.ஐ.ச.செயபாலன் அவர்களின் 'நம்பி' என்ற புதுக்கவிதையின் கருத்துகளை விளக்கி எழுதுக.

## பகுதி – உ

**V. ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**

**Write an essay in three pages to any one of the questions. (1x15=15)**

1. தமிழ் உயர்தனிச் செம்மொழியாக பெருமை பெற்றதற்கான காரணங்களைத் தொகுத்து கட்டுரை வடிவில் எழுதுக.
2. உம் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள நாலடியார் பாடல் கருத்துக்களைக் கொண்டு ஒரு கட்டுரை வரைக.

*******